

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக நேற்று முன்தினம் (20.08.2024 மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் திருநெல்வேலி மாவட்டம் அருவிக்கரை மீனவ கிராமத்தில் புதிய மீன்இறங்குதளத்தினை திறந்து வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து மீன் இறங்குதளத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு, சேரன்மகாதேவி சார் ஆட்சியர் அர்பித் ஜெயின் தலைமையில், மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எம்.ஜெகதீஸ் முன்னிலையில் குத்துவிளக்கேற்றி மீனவர்களுக்கு இனிப்புகளை வழங்கி பார்வையிட்டார்கள்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில்

# சிவகங்கை மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிக்கை!



சிவகங்கை . ஆக. 22-

சிவகங்கை மாவட்டக் கழக செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர்.பெரிய கருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

அடுத்த ஆண்டு2025 ஜனவரி 1ம் தேதியை தகுதி நாளாக புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதன்படி ஆகஸ்ட் 20ஆம் தேதி முதல் அக்டோபர் 18 ஆம் தேதி வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்குச்சாவடி மறுசீரமைப்பு , வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள முரண்பாடுகளைநீக்குதல் , வாக்காளர் பட்டியலில் நல்ல தரமான புகைப்படங்களை இணைத்தல், பகுதி எல்லைகளை ஒரளவு மறுசீரமைத்து வாக்குசாவடி பட்டியல் குறித்து ஒப்புதல் பெறுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப் பட உள்ளது.

இதையடுத்து ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் வரைவு பட்டியல் அக்டோபர் 29ஆம் தேதி வெளியிடப்பபட்டு நவம்பர் 28ஆம் தேதி வரை பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல் உள்ளிட்டவற்றிற்கான விண்ணப்பங்கள் பெறப் பட உள்ளது .2025 ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

எனவே அக்டோபர் 29ஆம் தேதி முதல் நவம்பர் 28ஆம் தேதி வரை, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படவோ அல்லது வாக்காளர் பட்டியல் ஏற்கனவே இடம்பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம், திருத்தங்கள், இடமாற்றம் செய்யவோ அல்லது ஆதார் எண்ணை இணைக்க விரும்பும் வாக்காளர்கள், தகுதியுள்ள குடிமக்கள் வடிவங்கள்6,6பி,7 அல்லது 8 ஆகியவற்றை பூர்த்தி செய்து வழங்கலாம். அலுவலக வேலை நாட்களில் வாக்கு சாவடி நிலை அலுவலர் வாக்குப்பதிவு அதிகாரி, உதவி வாக்குபதிவு அதிகாரி அலுவலகங். களில் சேர்க்கலாம். பெயர் சேர்த்தலுற்கான விண்ணப்பத் துடன் இருப்பிட முகவரி, மற்றும் வயது ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப் பட வேண்டும்.

வயதிற்கான சான்றாக பிறப்புச் சான்றிதழ், ஆதார், பான் அடையாள அட்டை, ஒட்டுனர் உரிமம், பிறந்த தேதியுடன் கூடிய, 10 அல்லது 12 ஆம் வகுப்பு சான்றிதழ், கடவுச்சீட்டு ஆகியவற்றை அளிக்கலாம். 25 வயதுக்கு கீழ் உள்ளவிண்ணப்பதாரர்கள் வயது சான்றிதழை அளிக்க வேண்டியது கட்டாயமாகும். இதற்காக இணைய தள முகவரி மற்றும் வாக்காளர் உதவி கைபேசி செயலிvoter helpline mobile app ஆகியவற்றின் மூலம் ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.மேற்கண்ட இப் பணிகளில் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மாவட்ட கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், ஒன்றிய, பேரூர்,நகர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அந்தந்த வாக்குச்சாவடி நிலைமுகவர்களுடன் bla2, இணைந்து மேற்கொண்ட பணிகளை உடனடியாக முழு அளவில் நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### தூத்துக்குடி வடக்கு - தெற்கு மாவட்ட தி.மு.க . இளைஞரணி சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பேச்சுப் போட்டி!

## அமைச்சர்கள் பி.கீதாஜீவன் - அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் பங்கேற்பு!

தூத்துக்குடி, ஆக. 22-

தூத்துக்குடி வடக்கு - தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பேச்சுப்போட்டி கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி. மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி, கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி வருகிற 24.08.2024 சனிக்கிழமை காலை 9.00மணி அளவில் தூத்துக்குடி கலைஞர் அரங்கம் பின்புறம் உள்ள லெட்சுமி மஹாலில் தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளராகிய எனது (பி. கீதாஜீவன்)தலைமையில், தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் முன்னிலையில் நடைபெற இருக்கிறது.

விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் விளாத்திகுளம் ஜி.வி.மார்க்கண்டேயன் ஒட்டப்பிடாரம் எம். சி.சண்முகய்யா, மாநகர செயலாளர் எஸ்.ஆர். ஆனந்தசேகரன், மாநகர மேயர் ஜெகன் பெரிய சாமி, மாவட்ட ஊராட்சி தலைவர் உ. பிரம்மசக்தி, மாநில இளைஞரணி துணை செயலாளர் இன்பாரகு ஆகியோர் வாழ்த்துரை வழங்க இருக்கிறார்கள். தூத்துக்குடி வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.எம்.மதியழகன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

தூத்துக்குடி தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.எம.இராமஜெயம் நன்றியுரை ஆற்றுகிறார்.

பேச்சுப்போட்டியின் நடுவர்களாக வே. மதிமாறன், புதுகோட்டை விஜயா, இந்திரகுமார் தேரடி ஆகியோர் கலந்துகொள்கிறார்கள். தூத்துக்குடி வடக்கு - தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், கழக அளவிலான இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பேச்சுப்போட்டியிக்கு பதிவு செய்துள்ள மாணவ - மாணவியர் அனைவரும் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

### ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம்,

# பெத்தாம்பாளையம் எல்.பி.பி. வாய்க்காலில் தண்ணீர் கசிவு!

## அமைச்சர் சு.முத்துசாமி நேரில் சென்று ஆய்வு!

ஈரோடு, ஆக. 22-

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், திங்களூர் உள்வட்டம், நல்லாம்பட்டி கிராமம் செந்தாம்பாளையம் குளம், ஒட்டங்காடு பகுதியில் கரையை ஒட்டியுள்ள எல்.பி.பி வாய்க்காலில் தண்ணீர் கசிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து, 20.08.2024 அன்று வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, தண்ணீர் கசிவு ஏற்படுவதை விரைந்து சரிசெய்யுமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

ஈரோடு மாவட்டம், எல்.பி.பி. வாய்க்காலில் கடந்த 15ம் நாளன்று தண்ணீர்திறந்து விடப்பட்டது. முறையாக எப்போதும் ஆகஸ்ட் 15 அன்று தண்ணீர் திறந்து விடப்படுவது ஒரு நடவடிக்கையாக உள்ளது. எல்.பி.பி. வாய்க்காலில் உள்ள அனைத்து இடங்களிலும் நடைபெற்ற பராமரிப்பு பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. இந்த வாய்க்காலை பொறுத்த வரை மிகவும் பழமையானதாகும். இதன் காரணமாக சிறிது கசிவு ஏற்பட்டுள்ளது. வாய்க்காலில் எப்பொழுதும் சிறிது தண்ணீர் வந்து கொண்டே இருக்கும். எனவே, முழுமையாக தண்ணீர் இல்லாமல் இருந்தால் தான் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இயலும். எனவே, இந்த வாய்க்காலில் அடுத்த ஆண்டு பராமரிப்பு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

வாய்க்காலில் ஏற்பட்டுள்ள தண்ணீர் கசிவு தொடர்பாக, நேற்று முன்தினம் (20.08.2024) சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் மற்றும் விவசாயிகளுடன் இணைந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தண்ணீர் கசிவினை தடுப்பதற்கான தற்காலிக நடவடிக்கை மேற்கொள்ள, ஆலோசனை செய்யப்பட்டுள்ளது. மேலும் வாய்க்காலில் ஏற்பட்டுள்ள தண்ணீர் கசிவு குறித்த காரணத்தினை முழுமையாக ஆய்வு மேற்கொண்டு, இன்னும்

இருதினங்களுக்குள் கசிவினை சரிசெய்து தண்ணீர் விட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த போகத்திற்கான தண்ணீரினை திறந்து விடுவதில் எவ்வித தடையும் இருக்க கூடாது. எனவே அடுத்த போகத்திற்கான தண்ணீர் திறந்து விடும் பொழுது, முறையாக திட்டமிட்டு, அதற்கான நிரந்தர தீர்வு காண ஆலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா உதவி ஆட்சியர் (பயிற்சி) ராமகிருஷ்ண சாமி, நீர்வளத்துறை தலைமைப் பொறியாளர் முருகேசன் (கோவை மண்டலம்), கண்காணிப்பு பொறியாளர் கோபி (நீர்வளத் துறை, ஈரோடு), செயற் பொறியாளர் திருமூர்த்தி உட்பட தொடர்புடைய துறை உயர் அலுவலர்கள், விவசாயிகள் ஆகியோர் உடனிருந்தனர்.



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் தற்காலிக பேருந்து நிலையத்திலிருந்து 2 வழித்தடங்களுக்கு புதிய பேருந்துகளை தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ.தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் கொடி அசைத்து துவக்கி வைத்தனர். நிகழ்வில் அரசு போக்குவரத்து கழக மாவட்ட வணிக மேலாளர் சுப்பிரமணியன், உதவி மேலாளர் மாரியப்பன், கிளை மேலாளர் பாலசுப்பிரமணியம், நகர செயலாளர் பிரகாஷ், துணை செயலாளர் முத்துக்குமார், நகர்மன்ற தலைவர் உமா மகேஸ்வரி, தலைமை செயற்குழு உறுப்பினர் மகேஸ்வரி,மாவட்ட பிரதிநிதிகள் மருதையா, செய்யது அலி, நகர்மன்ற உறுப்பினர்கள் செல்வராஜ், ராஜா, விஜயகுமார், தொ.மு.ச. நெல்சன், சங்கர்ராஜ், குருசாமி, செல்வகுமார், வார்டு செயலாளர் வீரா உள்பட பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் அருந்ததியர் சமூகத்திற்கு வழங்கப்பட்ட 3% உள் இட ஒதுக்கீட்டை உச்சநீதிமன்றம் அங்கீகரித்ததற்கு உறுதுணையாக இருந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் 20/08/2024 அன்று செவ்வாய்க்கிழமை, தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் உள்ள லட்சுமி மஹாலில், ஆதித்தமிழர் பேரவையின் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் சிறப்புரையாற்றினார். உடன் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும்,தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளருமான பெ.கீதா ஜீவன், மாநிலங்களவை உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளருமான அந்தியூர் செல்வராஜ், ஆதித்தமிழர் பேரவை தலைவர் அதியமான், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகவேல் ராஜன், ஒன்றிய செயலாளர்கள் பீக்கிளிப்பட்டி முருகேசன்,கே.ராதாகிருஷ்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### ஈரோடு மாவட்டம் - புஞ்சைதுறையம்பாளையம் கல்குவாரியில் நிகழ்ந்த

# வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக. 22-

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம், புஞ்சைதுறையம்பாளையம் கிராமத்திலுள்ள கல்குவாரியில் நிகழ்ந்த வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், வாணிபுத்தூர் உள்வட்டம், புஞ்சை துறையம்பாளையம் 'அ' கிராமத்தில் அனுமதியின்றி செயல்பட்டுவந்த தனியார் கல்குவாரியில் நேற்று முன்தினம் (20.8.2024) மாலை சுமார் 5.30 மணியளவில் எதிர்பாராதவிதமாக நிகழ்ந்த வெடிவிபத்தில் கல் உடைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த கோபிசெட்டிபாளையம் வட்டம், அயலூர் கிராமத்தைச் சேர்ந்த செந்தில்குமார் (வயது 50) த/பெ. ராஜீ மற்றும் கர்நாடக மாநிலம், சாம்ராஜ்நகர் மாவட்டம், மாட்டவள்ளி பகுதியைச் சேர்ந்த அஜீத் (வயது 27) த/பெ. ஆறுமுகம் ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்த வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும்உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### உயர் பதவிகளில் நேரடி நியமனத்தை ஒன்றிய அரசு ரத்து செய்திருப்பது

# சமூக நீதிக்குக் கிடைத்த வெற்றி - குரல் கொடுத்த முதல்வருக்கு நன்றி!

## மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. அறிக்கை!



சென்னை, ஆக.22-

இட ஒதுக்கீட்டுக்கு எதிரான ஆட்சேர்ப்பு முறையாக உயர் பதவிகளில் நேரடி நியமனத்தை ஒன்றிய அரசு கடைப்பிடித்ததை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடுமையாக எதிர்த்ததைத் தொடர்ந்து அந்த ஆட்சேர்ப்பு ஒன்றிய அரசு ரத்துச் செய்திருப்பது சமூக நீதிக்குக் கிடைத்த குறிப்பிடத்தக்க வெற்றி எனவும், இட ஒதுக்கீட்டை எப்போதும் பாதுகாக்கும் முதல்வ ருக்கு தாம் கடமைப்பட்டிருப்பதாகவும் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வு வாரியமானது ( UPSC ) ஆகஸ்ட் 17, 2024 அன்று, 45 இணைச் செயலாளர் மற்றும் இயக்குநர்/துணைச் செயலாளர் பதவிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான அறிவிப்பை வெளியிட்டது.

எங்களது முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், இடஒதுக்கீடு தொடர்பான அரசியலமைப்பு உத்தரவாதத்திற்கு முரணான யு.பி. எஸ்.சி.யின் அந்த அறிவிக்கையை நான் கடுமையாக எதிர்த்தேன்.

**பிரதமரிடம் நான் எழுப்பியிருந்த கேள்வி!**

இந்த சட்டவிரோதமான, இடஒதுக்கீட்டுக்கு எதிரான ஆட்சேர்ப்பு செயல்முறையை தொடரப் போகிறீர்களா அல்லது அரசியல் சட்ட இட ஒதுக்கீட்டு முறையை செயல்படுத்தி புதிய நியமனத்திற்கு அழைப்பு விடுக்கப் போகிறீர்களா? என்று பிரதமர் அவர்களிடம் கேள்வி எழுப்பியிருந்தேன்.

ஒன்றிய அரசின் லேட்டரல் என்ட்ரி நடைமுறையானது தகுதியான எஸ்சி, எஸ்டி, ஓபிசி, மற்றும் சிறுபான்மை அதிகாரிகளின் உயர் வாய்ப்புகளை பறிப்பதன் மூலம் சமூக நீதியை நேரடியாக குழிதோண் டிப் புதைப்பதாக, நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் தனது எக்ஸ் தள பதிவின் வாயிலாக தனது கவலையை தெரிவித்திருந்தார்.

மேலும், இந்த நடைமுறையை ஒன்றிய அரசு நிறுத்த வேண்டும் என்றும், கிரீமிலேயர் முறையை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என்றும் முதல்வர் அவர்கள் கூறியிருந்தார்.

இத்தகைய எதிர்ப்பினைத் தொடர்ந்து, ஒன்றிய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் அவர்கள் இந்த அறிவிக்கைகளைத் திரும்பப் பெறக் கோரி ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வு வாரியத்தின் தலைவர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

ஆனால், இந்த பிரச்சனை இத்துடன் முடிந்துவிடவில்லை. இடஒதுக்கீடு இல்லாமல் ஒன்றிய அரசில் ஏதேனும் பதவிகள் இருக்க முடியுமா? என்றால் அதற்கு இல்லை என்பதே பதிலாகும். எனவே, இது சமூக நீதிக்கு கிடைத்த குறிப்பிடத்தக்க வெற்றியாகும்.

**சமூக நீதியை எந்நாளும் காத்திடும் நமது முதல்வர்!**

சமூக நீதிக்கு குந்தகம் விளையும் போதெல்லாம், அதற்காக குரல் கொடுத்து இடஒதுக்கீட்டைப் பாதுகாக்க அயராது உழைத்து வரும் எங்களது தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நான் என்றென்றும் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இவ்வாறு பி.வில்சன் எம்.பி. தெரிவித்துள்ளார்.


**கோயம்புத்தூர் மாநகராட்சி**

பொறியியல் பிரிவு

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.(e)2/2024 நாள் : 19.08.2024

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண். 32, 48, 70, 80 மற்றும் 82-க்குட்பட்ட பகுதிகளில் மழை நீர் வடிகால், கான்கிரீட் தளம், கட்டிட பணி, தூர்வாருதல் மராமத்து பணி, அபிவிருத்தி பணி மற்றும் பாதாள சாக்கடை பணிகள் | 10 பணிகள் | 29.08.2024 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 30.08.2024 பிற்பகல் 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் - 1. தொலைபேசி எண். 0422 2396026. Email : commr.coimbatore@tn.gov.in

உதவி ஆணையாளர், மத்திய மண்டலம், கோயம்புத்தூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 433/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 20.08.2024




விருதுநகர் சட்டமன்றத் தொகுதி விருதுநகர் நகராட்சி சுப்பையா நாடார் அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அரசின் விலை இல்லா மிதிவண்டி வழங்கும் திட்டத்தின் படி மாணவ,மாணவியர்களுக்கு சட்ட மன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், விலை இல்லா மிதிவண்டிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் நகர சேர்மன் எஸ்.ஆர்.எஸ்.ஆர்..மாதவன் மற்றும் துணை சேர்மன் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்,கவுன்சிலர்,தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,கழக நிர்வாகிகள் மற்றும்மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.